பக்கங்கள் 8 ★

# ஈழநாடு

**EELANAADU**

50 சதம்

மலர் 21 | தை 10 | ரபி-அவ் 5 | இதழ் 346

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 24-1-80

RECEIVED 1980-1-24 PERIODICALS DIVISION LIBRARY

**புதிய வகுப்புகள்**

G. C. E. A/L O/L

1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்

ஆரம்பம் 1-2-80

லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சோவியத் விஞ்ஞானி தடுப்புக்காவலில்

(மாஸ்கோ)

மனித உரிமைகள் இயக்கத் தலைவரும் புகழ்பெற்ற ரஷ்ய விஞ்ஞானியுமான டாக்டர் அண்ட்ரு ஷக்காராவ் கைது செய்யப்பட்டு எதுவித வெளித் தொடர்புகளுமில்லாத ஒரு நகரத்தில் காவலில் வைக்கப்

(8-ம் பக்கம்பார்க்க)

### சர்வஜனவாக்குரிமை கிடைத்து 50 ஆண்டுகள் பூர்த்தி

# சர்வதேசிய மட்டத்தில் கொண்டாட ஏற்பாடு

## இந்த வீரர்களுக்கு மீண்டும் வேலை

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தினால் கட்டாயலீவில்அனுப்பப்பட்ட 14 ராணுவ, கடற்படை வீரர்களுக்கு மீண்டும் வேலை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த வீரர்களின் பிரச்னை தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு இதற்கு சிபார்சு செய்துள்ளது. இந்த வீரர்கள் 7 பேரே இப்பொழுது மீண்டும் வேலையில் சேரக் கூடியநிலையில் இருப்பதாகத்

(8-ம் பக்கம் பார்க்க)

## தொகுதிகள் தோறும் ஒரு பாரிய திட்டம்

(கொழும்பு)

**இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவுபெறுவதையொட்டி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கொண்டாட்டங்களை நடத்துவதற்கு நேற்று கூடிய அமைச்சர்அவை முடிவுசெய்தது.**

1981ம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையில் சர்வஜனவாக்குரிமை வழங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவுபெறுகின்றது.

இதையொட்டி ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக தேர்தல் தொகுதி தோறும் பாரிய திட்டம் ஒன்றை சிரமதானம் மூலமும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலமும் நிறைவேற்றுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று ஒவ்வொரு அமைச்சும் ஒவ்வொரு முக்கிய திட்டத்தைச் செயல் படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி கல்வி அமைச்சு நாடு முழுவதற்குமான கட்டுரைப் போட்டிகளை நடத்தும். தகவல்திணைக்களம் சுவரொட்டி போட்டியொன்றையும் கலாச்சார அமைச்சும் ராஜாங்க அமைச்சும் கூட்டாக கண்காட்சியொன்றையும் நடத்தவிருக்கின்றன,

சமூகசேவைகள் அமைச்சு முத்திரையொன்றை வெளியிடும் வெளிநாட்டமைச்சு சர்வதேசத்தலைவர்கள் கலந்து கொள்ளும் மகாநாடு ஒன்றை நடத்தும்.

இந்தத்திட்டங்கள் நிறைவேறுவதற்கு பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா ஒருங்கிணைப்பு அமைச்சராக செயற்படுவார்.

ஏற்கனவே இந்தக்கொண்டாட்டங்கள் தொடர்பாக பிரதமமந்திரி காமன்வெல்த் செயலகத்துடனும் அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்துடனும் தொடர்பு கொண்டுள்ளார். [ம]

## "வீடற்றவரின் பிரச்னையை தீர்ப்பதே அரசின் நோக்கு"

### நாவற்குழியில் மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"வீடுகளைஅமைத்துவீடற்ற மக்களுக்கு வழங்குவதன்மூலம் அவர்களது பிரச்னையைத் தீர்த்துவைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்"

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இவ் வீடமைப்புத்திட்டத்திற்கான அத்திபாரக்கல்லை யாழ். மாவட்ட அமைச்சர் திரு. விஜயக்கோன், யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி வடஇலங்கை வீடமைப்புச் சங்கத் தலைவர் திரு. மகேஸ்வரஐயர், செயலாளர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி ஆகியோர் நாட்டிவைத்தனர்.

இவ் விழாவில் வடஇலங்கை வீடமைப்புச் சங்கத் தனாதிகாரி திரு. என். மகேசன் பேசுகையில்; "1958ம் ஆண்டே இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 1971ம் ஆண்டிலேயே ஆணையாளரால் உளவுச்சீட்டுமூலம் காணி வழங்கப்பட்டது. தற்போது கட்டப்படும் வீடுகளும் அவர்களுக்கே வழங்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். (கு)

## நேபாள மன்னர் இலங்கை வருகிறார்

[கொழும்பு]

நேபாள மன்னர் பிரேந்திராவும் மகாராணியும் பெப்ரவரி 24ந் திகதி இலங்கை அரசின் விருந்தினராக இலங்கை வருகின்றனர். அவர்கள் பெப்ரவரி 27ம் திகதிவரை இங்கிருப்பார்கள். [ம]

### சட்டத்தரணி கொலை:

# நால்வர் கைது!

### திருட்டுப்பொருள்கள் மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். சட்டத்தரணி அலோசியஸ் கொலையுண்டதுதொடர்பாக சந்தேகத்தின் மீது நாலு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இக் கொலை சம்பந்தமாக இன்னும் சிலரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

யாழ். பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம், கான்ஸ்டபிள் தேவசகாயம் ஆகியோர் சந்தேகத்தின்பேரில் தாராக்குளத்தைச் சேர்ந்த ராதா, இராசலிங்கம் ஆகியோரைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்திய போது சந்தேகநபர்கள் சம்பவதினம் இரவு ஒரு பெரும் கொள்ளை நடத்தியது தெரிய வந்ததாம்.

யாழ்ப்பாணம் மூன்றும் குறுக்குத்தெருவிலுள்ள பொறியியலாளர் சரவணமுத்துவும், அவரது குடும்பத்தினரும் விடுதலையைக் கழிக்கும்முகமாக மட்டக்களப்பிற்குச் சென்றபோது மேற்படி கோஷ்டியினர் பொறியியலாளரின் வீட்டை உடைத்து வீட்டிலிருந்த 22 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 டிரான்சிஸ்றர் றேடியோக்களையும், மற்றும்பல பெறுமதிவாய்ந்த உடுபுடவைகளையும் நகைகளையும் கொள்ளை அடித்து, தாராக்குளத்திலுள்ள தத்தமது வீடுகளில் புதைத்து வைத்திருந்தனர் என்றும், யாழ் சப்பல்வீதியில் தனிமையாக வசித்துவந்த வயோதிப சட்டத்தரணி அலோசியஸ் வீட்டிற்குள் புகுந்து சட்டத்தரணியை கொலைசெய்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது,

இதனைத்தொடர்ந்து சந்தேகநபர்களின் வீடுகளை சோதனையிட்ட பொலிசார்; சந்தேகநபர்களின் வீடுகளுக்குப் பின்புறமாக நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த தகரப்பெட்டிகளை வெளியே எடுத்தபோது அவற்றுள் திருட்டுப் பொருட்கள் இருந்ததாம்.

மேற்படி திருட்டு சம்பந்தமாக மட்டக்களப்பிற்குச் சென்ற சரவணமுத்து குடும்பத்தினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களான ராதா, இராசலிங்கம் ஆகியோர் நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு காலவரையின்றிக் காவலில் வைக்கப்

(8-ம் பக்கம்பார்க்க)

### சம்பளம் எடுத்துச் செல்கையில் நடக்கும்

# கொள்ளைகளைத் தவிர்க்க அதிபர்களுடன் ஆலோசனை

### யாழ். பொலிஸ் அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை எடுத்துச் செல்கையில் கொள்ளையடிக்கப்படுவது- பயமுறுத்தலுக்குள்ளாவது போன்ற சம்பவங்களை தடுப்பது பற்றியும்- இதற்கான பொலிஸ் பாதுகாப்புக்களை பலப்படுத்துவது பற்றியும் ஆலோசனை நடத்துவதற்காக பாடசாலை அதிபர்களின் மகாநாடொன்றை யாழ். பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸிலி விக்கிரமசூரியா நடத்தவிருக்கிறார்.

அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஆசிரியர்களின் சம்பளத்தை எடுத்துச் செல்கையில் நடைபெற்ற கொள்ளையை அடுத்து பொலிஸ் அதிபர் இந்த மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இம் மாநாட்டில் சகல பாடசாலைகளின் அதிபர்களையும் கலந்து கொள்ள ஆவனசெய்யும்படி வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகரைக் கேட்டுள்ளதாகப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்கள் கலந்து கொள்ள முடியாவிட்டால் வட்டாரக் கல்வி அதிகாரிகளையாவது இம்மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பி வைக்கும்படி பொலிஸ் அதிபர் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

வங்கியிலிருந்து பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை எடுத்துச் செல்லும் போது பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதாக இருந்தபோதும் அதிபர்கள் பொலிசாரின் உதவியை நாடாமையினாலேயே இக் கொள்ளைகள் நடைபெறுகின்றன என்று கூறிய பொலிஸ் அதிபர், பொலிசாரின் உதவியுடன் சம்பளப் பணத்தை எடுத்துச் செல்வதன் மூலம் கொள்ளைகளைத் தடுக்க முடியுமெனவும் தெரிவித்தார். (கொ)

சாவகச்சேரி

## இந்துகல்லூரியில் பொலிஸ்அதிபர் நேரில்விசாரணை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நடைபெற்ற ஆசிரியர் சம்பளப் பணக் கொள்ளை சம்பந்தமான விசாரணை ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குச் சென்ற யாழ். பொலிஸ் அதி

(8-ம்கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரி எம்பரம்

### தேவை

தண்ணீர் இறைக்கும் பம்பு கள் பொருத்துவதிலும், திருத்துவதிலும் தகுந்த அனுபவமுள்ள தொழிலாளர்கள் உடனே தேவை. 24-1-80 இன்று 25-1-80 நாளை ஆகிய தினங்களில் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். யுனைட்டட் அக்ரோ என்ஜினியரிங், (செம்மா) நாவற்குழி, கைதடி. 4758

பனம் நார்க்கடகம் 10,000 உடன் தேவை. மாதிரிக் கடகத்துடன் விலையைக் குறிப்பிட்டு பனம்பொருள் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புக் கட்டிடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும். 4769

மோட்டர் ரீவைன்டிங் தொழில் செய்யக்கூடிய 5 வருட அனுபவமுள்ள ஒருவர் தேவை. 26-1-80 காலை பத்து மணிக்கு நேரில் வரவும். ரொலெக்ஸ் ஒட்டோ சென்றர், இல. 9, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 4740

பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கு 'பழுதற்ற நல்ல பனை ஓலைச்சார்வு, ஈக்கிள், நார் என்பன பெருமளவில் தேவைப்படுகின்றன. இவற்றின் விலைகளையும், தொகையையும் குறிப்பிட்டு தலைவர், பனம்பொருள் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புக் கட்டிடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும். 4768

### விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் நல்லநிலையில் விற்பனைக்குண்டு. ஐங்கரன் ஸ்ரோர்ஸ், 14, பஸ் நிலையம் முன்னுல், யாழ்ப்பாணம். 4755

லேலண்ட் ரெறியர் (Leyland Terrier) 1973-ம் மொடல் சிலின்டர் பெட்டி வான், அலுமினியம் பொடி (Body) தினமும் பி. ப. 3 மணியிலிருந்து இரவு 7 மணிவரை 'சுகிஸ் தான்', அச்சுவேலியில் (தபால் நிலையத்திற்குப் பின்) பார்வையிடலாம். 4762

2000 வெற்றுச் சாக்குகள் வரை விற்பனைக்குண்டு. தொடர்பு: மனேஜர், ஏ. பவர் அன் கொம்பனி லிமிட், 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4739

### வாடகைக்கு

பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கு நாலறைக்குக் குறையாத வீடுகள் கச்சேரிக்கு மூன்றுமைல் சுற்றளவுக்குள் தேவைப்படுகின்றன. மின்சார வசதியும், நீர்வசதியும் இருப்பின் விரும்பத்தக்கது. தலைவர், பனம்பொருள் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புக் கட்டிடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 4767

### தவறிவிட்டது

D L 346880 இலக்கமுடைய டிரைவிங் லைசென்ஸ் 20-1-80ந் திகதி மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் ந. மகாதேவன், மாதகல் மேற்கு, மாதகல் என்ற விலாசத்திற்கு தயவுசெய்து அனுப்பிவைக்கவும். 4757

### வகுப்புகள்

பரதநாட்டிய வகுப்புகளுக்கு புதிய மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விபரங்களுக்கு: ப்ருஹதீஸ்வர நாட்டியாலயம், 26, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 4761

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84அ- பிரிவுகள் 524,532)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கரவெட்டி வடக்கிலிருந்து நாகமுத்து நடராசா என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

நாகமுத்து நடராசா கைம்பெண் நாகமுத்து, கரவெட்டி வடக்கு.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1088

1. நடராசா மகள் மனோரஞ்சினி,
2. நடராசா மகள் மனோராணி,
3. நடராசா மகள் மனோகரி,
4. நடராசா திருகுலேந்திரன், - கரவெட்டி வடக்கு,
5. நடராசா குகநேசன், கரவெட்டி வடக்கு,
6. வல்லிபுரம் சுப்பையா, பன்னிசுட்டான், கண்டாவளை,
7. குமாரு இரத்தினம் கைம்பெண் செல்லப்பாக்கியம்,
8. நாகமுத்து வேலாயுதம், கரவெட்டி வடக்கு.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு தை மாதம் 25-ஆந் நாளன்று முற்பகல் 9-30மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

**க. விஸ்வலிங்கம்,**
பதிவாளர்

தயாரிப்பு:
**க. வ. சுப்பிரமணியம்**
சட்டத்தரணி.

1979-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 7-ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 4744

## கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

## எரிபொருள் நிலையத்திற்கு வெள்ளை(வர்ணம்) பூசுதல்

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் சுற்று நிருபம் இல: 343க்கு அமைவாக எமது எரிபொருள் நிலையத்தின் மேல் பக்கத்தினதும், தளங்கள், சுவர்கள் பகுதிகளுக்கும் பெயின்ற் (வர்ணம்) பூசுவதற்கு எம்மால் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 2-00 செலுத்திப் பெறப்படும் எமது விண்ணப்பப்பத்திரத்தில் 7-2-80-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக ''பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். விபரங்களை எரிபொருள் நிலையத்திலும், எம்மிடத்திலும் பெறலாம்.

**பொது முகாமையாளர்**
கரைச்சி தெற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

4763

## யோகபுரத்தில் பொதுச்சந்தை

(யோகபுரம்)

யோகபுரம் பொதுக் சந்தை இம்மாதம் 28-ந் தேதி திறக்கப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் 17,500 ரூபாவை முல்லைத்தீவு எம். பி. திரு. சே. மா. செல்லத்தம்பு சந்தையின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்தார்.

யோகபுரப் பகுதியில் இப்பொதுச் சந்தையை கட்ட மூலகாரணமாய் இருந்த அப்போதைய யாழ். மாவட்ட காணி அதிகாரியும், தற்போதைய யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபரான திரு. மு. பஞ்சலிங்கம், அப்போதைய யாழ். அரச அதிபராக கடமையாற்றிய திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோரது முயற்சியேயாகும்.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் திரு. அ. இ. மன்சூர் சந்தையை திறந்துவைப்பார்கள். அரச அதிபர் திரு. ஒஸ்ரின் ஜெயவர்தன, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்வார்கள். [சு]

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

வரணி இயற்றாலை காலஞ்சென்ற தில்லைநாதர் கைம்பெண் சின்னப்பிள்ளை என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

1. வீரகத்தி முருகுப்பிள்ளையும் பெண்
2. பாறுப்பிள்ளை முருகுப்பிள்ளை - இருவரும், நாவற்குழி, வரணி.

மனுதார்கள்.

எதிராக

இல: 192/T.

1. கணபதிப்பிள்ளை இராமநாதனும் பெண்
2. செல்லம்மா இராமநாதன் - இருவரும். நாவற்குழி, வரணி.

- எதிர்மனுதார்கள்.

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச்சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 21-ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னில்தோன்றிஅப்பின்னுறுதிக்கட்டளைஏன்முற்றானதாகப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**V. சிவசுப்பிரமணியர்.**
ஒப்பம்
பதிவாளர்.

தயாரிப்பவர்:
**சு. கந்தசாமி**
மனுதாரின் சட்டத்தரணி.

326

## கேள்வி கோரல்

இசுசு லொறி 24/1036 இஞ்சின் வேலை செய்வதற்கு சுருச் உரிமையாளர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. 6-2-80க்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்புதல்வேண்டும். விபரங்கள் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்,**
மானிப்பாய்
ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

4764

## தமிழர்இன்னலடையும்வேளை குரல்கொடுத்தது தி. மு. க."

கொழும்பு)

''உலக நாடுகளிலெல்லாம் உழைப்பைச் சிந்திய தமிழர்கள் இன்னல் அடையும்போது அதற்கு உரிமைக்குரல் ஆட்சேபக் குரல் எழுப்பிய இயக்கம் தி. மு. க. இலங்கைத் தமிழர்கள் சூறையாடப்பட்டு கற்பழிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டு செல்வம் பறிக்கப்பட்டபோது கலைஞர் தலைமையில் நடாத்தப்பட்ட இரண்டு பேரணிகள்தான் உலகக் கண்களைத் திறக்கவைத்தது.''

மேற்கண்டவாறு கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் நடாத்திய பொங்கல் விழா-தி. மு. க. முப்பதாண்டு நிறைவு விழாவின்போது மன்றத் தலைவர் திரு. க. நவசோதி பேசுகையில் குறிப்பிட்டார்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் திரு. ம. அ. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கவிஞர் சிவராசன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. எஸ். பி. பாண்டியன் பேசுகையில் ''மலையகம் பட்டினிப் பொங்கலை நடாத்திக் கொண்டிருக்கும் பரிதாபநிலையில் உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மலைய இளைஞர் முன்னணித் தலைவர் சட்டத்தரணி திரு. இரா. சிவலிங்கம் பேசுகையில் அயத்தொல்லா கொமேனி ஐரோப்பிய ஆதிக்கத்திற்கெதிராக இஸ்லாமிய ஆட்சியை

(5-ம் பக்கம் பார்க்க)

......

## புதிய ஸ்ரேடியம்

(புளியங்குளம்)

நெடுங்கேணி கிராம சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையான புதிய ஸ்ரேடியத்தை அமைக்க கிராமசபையின் விசேட ஆணையாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பாலசுந்தரம் 15 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (சு)

புத்தம் புதிய
## ஹொண்டா CD 185 (ரேட் மாஸ்ரர்)
விற்பனைக்குண்டு

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி;-
62, (37) மூன்றும் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 4760

## ஆசிரியைகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு க. பொ. த. உயர்தர வகுப்புகளில் விலங்கியல், தாவரவியல் கற்பிப்பதற்கு 2 பட்டதாரி ஆசிரியைகள் தேவை. பட்டப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம். 27/1/80-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
இந்து மகளிர் கல்லூரி.

4772

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(வரைவுள்ளது)

## கேள்வி விண்ணப்பம்

எமது சங்க மின்தறி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கிறே பப்பிளின் (5000 மீற்றர்) பொலியீஸ்ரர் (10,000 மீற்றர்) ஆகியவை கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. முடிவுத் திகதி 30-1-1980.

விண்ணப்பகாரர் வைப்புப் பணமாக ரூபா 250 - செலுத்துதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## பஸ் தரிப்பு நிலையங்கள்

### வடபிராந்திய போக்குவரத்துச் சபை

வடபிராந்திய போக்குவரத்துச்சபை, வட மாகாண லயன்ஸ் கழகத்துடனும், சீமேந்து கூட்டுத்தாபனத்துடனும் கூட்டாகச் சேர்ந்து வடபகுதியில் பஸ் தரிப்புநிலையங்களை அமைக்க ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கொடைவள்ளல்களும், மறைந்தவர்களின் ஞாபகார்த்தமாக பஸ் தரிப்பு நிலையங்களை மக்கள் சேவையின் நிமித்தம் அமைக்க விரும்புவோரும் அல்லது வர்த்தகர்கள் தங்களது வியாபார விளம்பரங்களையொட்டி பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்க விரும்புவோர்களும் தங்களுடைய பெயரை அனுப்புமாறு வேண்டப்படுகிறார்கள். ஒரு பஸ் தரிப்பு நிலையம் அமைப்பதற்கு சுமார் ரூபா 6500/- செலவாகும். சீமேந்து கூட்டுத்தாபனம் ஒவ்வொரு பஸ் தரிப்பு நிலையத்திற்கும் ரூபா 5000,- பெறுமதியான கட்டிடப் பொருட்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே பஸ் தரிப்பு நிலையங்களை அமைக்க விரும்புவோர்களின் செலவு ரூபா 1500/- மட்டுமே.

இது சம்பந்தமாக மேலதிக தகவல்பெற விரும்புவோர் இத்திட்டத்திற்கு இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட திரு. ரி. நவரட்ணம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். இவருடைய முகவரி பின்வருமாறு: இலக்கம் 165, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (தொலைபேசி இலக்கம்: 7851)

**டட்லி குணசேகர,**
தலைவர்,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை.

165, 4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
18-01-1980.

4756

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

''உழைப்புத்தான் வாழ்க்கை என்று உணர்ந்து வேலை செய். அவன் கால்பட்ட இடமெல்லாம் ரோஜா செடிகள் முளைக்கின்றன.

--லத்தீன் பழமொழி

## மக்கள் கருத்து

### முல்லைத்தீவு எம். பி.யின் கவனத்திற்கு

வவனிக்குளம் வலதுகரை பெருவாய்க்கால் துருசுக்கு அருகாமையில் இடது பக்கமாக சுற்றுலா விடுதிச்சாலை வரை, நடுத் துருசுக்கு நேராக உள்ள மலைப்பாங்கான பகுதியைப் பெயர்த்து, இடது துருசுக்கு அருகிலுள்ள குளக்கட்டில் தண்ணீர் தேக்க காலங்களில் ஏற்படும் தாக்கம் மிகமிகக் குறைவாக இருக்கும் என்பதை பொறியியல் நுணுக்கத்தோடு கருதுகிறவர்களுக்கு மட்டும் விளங்கும் தண்ணீர் குளத்தில் தேக்கமும் மிக மிகக் கூடும்.

குளத்திற்குரிய இடது பெருவாய்க்காலில் மட்டும் 7 பெருநீர்த் தேக்கங்கள், குளத்திலிருந்து 9 மைல் தொலைவிலுள்ள விநாயகபுரம் போன்ற மிக மிக வரண்ட பகுதி வயல்களுக்குத் தண்ணீரைப் பாய்ச்ச முடியாமல் கெடுத்து வருகின்றன. சொல்லப்பட்ட நீர்த் தேக்கங்கள் அணைக்கட்டு மூலம் தடுக்கப்பட்டு தண்ணீர்ப் பாய்ச்சலை குறைந்த நாட்களில் துரிதப்படுத்த வேண்டும்.

சொல்லப்பட்ட 9 மைல் தொலைவிலுள்ள விநாயகபுர வயல்களுக்கு வயல்வாய்க்கால் அடையாளங்களும், வயல் குழாய்களும் இல்லை. மேற்குறிப்பிட்ட குறைபாடு பற்றி வவனிக்குள நவீன மயப்படுத்தல் குழுத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் சொல்லப்பட்ட திருத்தங்கள்பற்றி நீர்ப்பாசன இயக்குநரிடமிருந்து தங்களுக்கு உத்தரவு கிடைத்தால் தாங்கள் இவைகளை மேற்கொள்ள முடியுமென்று கூறுகிறுர்கள்.

இக் குறைபாடுகள் பற்றி நீர்ப்பாசன இயக்குநருக்குத் லதரிவிக்கப்பட்டது. நீர்ப்பாசன இயக்குநரே, கிளிநொச்சிப் பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளர் மூலம், நிதி ஒதுக்கீடுகள் வசதியளிக்கப்பட்டால் தாங்கள் அவைகளை மேற்கொள்ளலாமென அறிவித்திருக்கிறுர்கள்.

எனவே நிதி ஒதுக்கீடுகளை வழங்க ஆவன செய்யுமாறு முல்லைத்தீவுத் தொகுதிப் பாராளுமன்ற உடுப்பனரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**நா. சண்முகம்**
யோகபுரம்.

### சென். மேரிஸ் புதியகட்டிடம்

(வேலணை)

ஊர்காவற்றுறை சென் மேரிஸ் மகளிர் கல்லூரியில் 30 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதியகட்டிடத்தை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் அண்மையில் திறந்து வைத்தார்.

புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்திற்கான பணத்தை திரு. இரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# "தமிழ்மக்களின்தேவைகளை அறிந்து அரசாங்கம் உடன்செயல்படுகிறது

## நாவாந்துறை வீடமைப்புத் திட்டம் இரண்டு வருடங்களில் பூர்த்தியாகும்"

-- யாழ். மாவட்ட அமைச்சர்

(நமது அலுவலக நிருபர் எஸ். தர்மசிங்கம்)

(யாழ்ப்பாணம்)

''ஐக்கிய தேசியக்கட்சி அரசு, தமிழ்மக்களின்தேவைகளை அறிந்து உடன்செயல்படுகிறது. அதனுல் தமிழ் மக்கள் அரசுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்''

நாவாந்துறையில் தாழ்நிலப் பிரதேச நில மீட்சி அபிவிருத்திச் சபையினுல் சுமார் 35 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தை ஆரம்பித்து வைத்து யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

காணி, காணிகள் அபிவிருத்தி அமைச்சு தாழ்நிலப் பிரதேச நிலமீட்சிஅபிவிருத்தி சபைத் தலைவர் திரு. டி. டி டபிள்யூ தெல் கொடப்பிட்டியா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

### திட்டம் ஆரம்பம்

நாவாந்துறையில் உள்ள சிறு கடல் நிலத்தை மேட்டு நிலமாக்கி அங்கு வீடுகள் அமைத்து வீடில்லாத மக்களை குடியேற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் முதலாவதாக உழவு யந்திரத்தில் ஏறி யந்திரத்தை இயக்கி உழவு யந்திரத்தில் இருந்த மண்ணை நிலத்தில் கொட்டினுர்.

அதைத்தொடர்ந்துமேற்படி பிரதேச அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. டி. டி, டபிள்யூ தெல்கொடப்பிட்டியா யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள் திருவாளர்கள் என். ஜெகநாதன், எஸ். பஞ்சலிங்கம்ஆகியோரும் உழவு யந்திரங்களில் ஏறி அதைஇயக்கி அதிலிருந்த மண்ணைக் கொட்டி நிலத்தை மேடாக்கும்பணியை ஆரம்பித்து வைத்தனர்.

### 2-வது பெரும் திட்டம்

மாவட்ட அமைச்சர் திரு. விஜயக்கோன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: கொழும்பிற்கு அடுத்தபடியாக இத்திட்டம் முதல்முதலாக யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்கப்படுகிறது. 2 வருடங்களில் இத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு விடும். இத்திட்டம் இங்கு ஆரம்பிப்பதற்கு யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியும் யாழ், எம். பி. திரு. யோகேஸ்வரனும்தான் முன்னின்று செயல்பட்டனர். அதனுல் யாழ்ப்பாண மக்கள் அவர்களுக்கும் பிரதமர் திரு பிரேமதாசாவுக்கும் அரசிற்கும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.''

''பிரதமர் பிரேமதாசா நாவாந்துறையில் உள்ள 20 ஏக்கர் நிலத்தை சீர்திருத்தும்படி உத்தரவிட்டுள்ளதால்தான் நாம் இன்று இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இத்திட்டம் முடிவடைந்ததும் யாழ்ப்பாண மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

### காணி விலை அதிகரிப்பு

''யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ் மாநகரசபை எல்லைக்குள் கூடுதலான மக்கள் வாழ்கிறுர்கள். இங்குள்ள மக்களுக்குப் போதிய காணிகள் இல்லாமையயால்தங்களுக்குள்ள காணிகளை எல்லாம் சிறு சிறு துண்டுகளாகப் பகிர்ந்து அளித்துவிட்டனர். அதனுல் யாழ்ப்பாணத்தில் காணிகளின் விலை மிகவும் கூடிக்கொண்டே போகிறது

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் இல்லாததினுல், தனியாருக்குச் சொந்தமான காணிகளிலேயே அரச அலுவலகங்கள் சில அமைந்துள்ளன. அதற்கு வாடகைப் பணமும் கூடுதலாகச் செலுத்துகின்ருேம். இதையெல்லாம் மனதில் கொண்டுதான் இங்குள்ள தாழ்நிலத்தை மேட்டு நிலமாக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

''மக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தால் இத்திட்டம் மிக விரைவில் முடிவடைவதுடன் இத்திட்டம் நல்லமுறையிலும் அமையமுடியும்,'' என்ருர்.

## "யாழ். நகரின் வீடில்லாப் பிரச்னையும் தீருகிறது"

-- யாழ். அரச அதிபர்

### வீடில்லாப் பிரச்னை தீருகிறது

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் கூறியதாவது:

''கடந்த மாரிகாலத்தில் இங்குள்ள மக்கள் பட்ட கஷ்டங்களை நான் அறிவேன். குண்டும் குழியும் குப்பைகளும் பற்றைகளும் நிறைந்த இடமாக காட்சி அளித்த இப்பிரதேசம் நல்ல வீடமைப்புத் திட்டமாக மாற இருப்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்ருேம்.

''இத்திட்டம் பூர்த்தியானதும் யாழ் நகரின் வீடில்லாப் பிரச்னை தீர்க்கப்படுவதுடன் யாழ் நகரின் தேவைகள் பல பூர்த்தியாக்கப்பட்டு விடும். யாழ் நகரில் நல்ல ஒரு பீச்சும் அமைக்கப்பட்டு இந்த நகரம் ஒரு அழகாபுரியாகத் திகழும்.

''யாழ்ப்பாணத்தில் காணி பற்ருக்குறை, வீடு பற்ருக்குறைகள் இருப்பதையிட்டு நாம் வேதனை அடைகிறேம். காலாகாலமாக யாழ்ப்பாண மக்களும் குறிப்பாக நாவாந்துறை மக்களும் அடைந்து வந்த பிரச்னைகள் பல இத்திட்டம் பூர்த்தியானதும் தீர்க்கப்பட்டுவிடும்'' என்று கூறினுர். (கொ)

......

## "விநியோக முறை சரியாக நடைபெற வேண்டும்"

### யாழ். மாவட்ட அமைச்சர் கருத்து

(யாழ்ப்பாணம்)

''நாட்டிலுள்ள வர்த்தகர்கள் சரித்திரத்தில் இப்பொழுது புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த அரசு காலத்தில் வர்த்தகர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கினுர்கள்! பொருட்களை விநியோகம் செய்வதில் வர்த்தகர்களுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. உங்களுக்குக் கிடைக்கும் பொருட்களை சரியான முறையில் விநியோகம்செய்ய வேண்டும். பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தத் தேவையான பொருட்களை கொடுக்கவேண்டும்.''

இவ்வாறு, நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தகர்கள் கருத்தரங்கில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் பேசுகையில் கூறினுர்.

### 460 கிளைச் சங்கங்கள்

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ஞானப்பிரகாசம் பேசுகையில்; யாழ் மாவட்டத்தில் நாட்டில் 22 கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும், 10 லட்சம் பாவனையாளர்களுக்கு 460 கிளைச் சங்கங்கள் மூலம் பொருட்கள் வழங்கப்படுவதுடன் 200 உத்தரவு பெற்ற வியாபாரிகளும் சேவையாற்றுவதாகவும் கூறினுர்.

கூட்டுறவுச் சங்கத்திற்கும், உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்குமிடையில் நல்ல உறவு ஏற்பட வேண்டுமென்றும் அவர் கூறினுர்.

### அமைச்சரின் அவதானம்

இலங்கை வணிகர் சங்கச் செயலாளர் திரு. முத்துக்குமாரர் பேசுகையில், யாழ். மாவட்டத்தில் வணிகர் சங்கக்கிளை அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருவதாகக் கூறினுர்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் ஆங்கிலப் பேச்சை உதவி அரசாங்க அதிபர் ஒருவர் தமிழில் மொழிபெயர்த்த போது, அந்த மொழி பெயர்ப்பை உன்னிப்பாக அவதானித்த அமைச்சர் அதில் தவறு இருப்பதாகக் கூறி மீண்டும் ஒழுங்காக மொழி பெயர்க்குமாறு தெரிவித்தார். (கொ)

### புதிய உப தபாற்கந்தோர்

(புளியங்குளம்)

''புலோலிகிழக்குப்பகுதியில் ஒரு உபதபாற்கந்தோரை உடனடியாக நிறுவவேண்டும்'' என்று முன்னுள்பருத்தித்துறை தபாலதிபரான திரு. கே. ரி. பாலகிருஷ்ணன் கொண்டு வந்த பிரேரணை ஞானசம்பந்தர் கலாமன்றத்தில் நடைபெற்ற பொதுச்சபைக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

(5ம் கலத் தொடர்ச்சி)

லூரிகள் யாவும், பல்கலைக் கழக அந்தஸ்துப் பெறுவதுடன் ''சுதேச மருத்துவ நிறுவனம்'' என்னும் பெயரால் ஒருங்கிணைக்கப்பட்டு, உயர் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

---ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

இரண்டு நண்பர்கள் ஒரு ஹோட்டலுக்குச் சென்றனர். ''இரண்டு டீ; ஒன்று சீனி போடாமல்'' ஓடர் கொடுத்து டீயும் வந்துசாப்பிட்டாயிற்று. 'பில்' ஒரு ரூபாய் இருபது சதம். ''டீயின் விலை திடீரென்று பத்துச் சதம் உயர்ந்து விட்டதே'' என்று ஒரு நண்பர் சப்ளையரைக் கேட்டார். சீனியின் விலை திடீரென்றுதானே சார் உயர்ந்திருக்கு என்று சப்ளையர் பதிலளித்தார்.

''அப்படியா! ஆனுல் நாங்கள் எடுத்த டீயில் ஒன்றுக்குச் சீனி போடவில்லையே அதற்கும் அறுபது சதம் தானே போட்டிருக்கு'' என்று மற்ற நண்பர் கேட்டார்.

''ஒரு டீ அறுபது சதம். சீனி போட்டாலென்ன போடாவிட்டாலென்ன? நாங்களா சீனி போடமாட்டோம் என்று சொன்னேம்?''

சப்ளையரின் இந்தப்பதிலுக்கு என்ன சொல்வது? பணத்தைச் செலுத்திவிட்டு வெளியேறினுர்கள்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் வந்த வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கு இம்முறை உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது. சென்றவிடமெல்லாம் போட்டிபோட்டுக் கொண்டு பலரும் மாலை சூட்டி மகிழ்ந்தார்கள். பல இடங்களிலும் வர்த்தகப் பிரமுகர்கள் பலர் முன்னின்று வரவேற்ருர்கள்.

இந்த வரவேற்பையெல்லாம் நன்ருக அவதானித்த அமைச்சர், ''தேசியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தால் அடுத்த தேர்தலில் பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும்; அது மட்டுமல்ல நான்கு ஐந்து பேராவது மந்திரிகளாகலாம்'' என்று யோசனை கூறியிருந்தார்.

மந்திரியான எனக்குப் போட்டிபோட்டு வரவேற்பளித்து உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதைவிட நீங்களே மந்திரிகளாகி விட்டால் நல்லதல்லவா? என்று அமைச்சர் லலித் சொல்லாமல் சொல்லியிருக்கிறுர், சரியானயோசனைதானே!

ஃ ஃ ஃ

அரசாங்கத்தின் கீழ் இயங்கிவரும் சுதேச மருத்துவ நிறுவனத்தின் பரிபாலன சபையின் தலைவராக கலாநிதி கல்பகே நியமிக்கப் பட்டிருக்கிறுர். இச்சபையின் நிர்வாக சபைக்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் ஐவர் நியமிக்கப்பட்டுள்ளனர். வட இலங்கை சித்த மருத்துவ சம்மேளனத்தின் வேண்டுகோளின் பேரில் வைத்திய கலாநிதி எஸ். பி. ஈ. இன்னுசித்தம்பியும் ஐவரில் ஒருவராக நியமனம் பெற்றுள்ளார்.

வடஇலங்கை சித்த மருத்துவ சம்மேளனத்தின் தலைவரும், கடந்த பத்துத் தலைமுறைகளாக சித்த மருத்துவத் துறையில் ஈடுபட்டுவரும் குடும்பத்தைச் சேர்ந்தவருமான டாக்டர் இன்னுசித்தம்பியின் நியமனம் சித்த மருத்துவத் துறைக்கு அதிக பயன் தரும் என எதிர்பார்க்கலாம்.

இதுவரை காலமும் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கி வந்த சுதேச மருத்துவக் கல்

(4ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## "1983 பொதுத்தேர்தலில்

# தேசியக்கட்சிஒன்றுடன் தமிழ்மக்கள் இணைந்து போட்டியிட வேண்டும்!"

## ஸ்திரமான ஆட்சிக்கு இது வழிவகுக்கும்என்கிறார்'லலித்

(யாழ்ப்பாணம்)

"கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 140 ஆசனங்களைக் கைப்பற்றியதுபோல், 1983 ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் எந்த ஒரு கட்சியாவது 70 ஆசனங்களுக்குமேல் பெற முடியாது. ஆதலால் இலங்கையில் வாழ்கின்ற 25 லட்சம் தமிழ் மக்களும், ஒரு தேசியக் கட்சியின் கீழ் நின்று போட்டியிடுவதன்மூலம் தமிழ் மக்கள் 50 ஆசனங்களைக் கைப்பற்றி இந்நாட்டில் ஸ்திரமான ஆட்சியை அமைக்க உதவ முடியும்."

யாழ். பிரதான வீதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். இக்கூட்டம், யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வாடிவீட்டுச் சந்தியிலிருந்து கட்சிக் காரியாலயம்வரை வீதியின் இருமருங்கும் பச்சை நிற ஜோடனைகளாலும், வாழை மரங்களாலும், மகர தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இச்சந்தியிலிருந்து கட்சிக் காரியாலயம் வரை மேளவாத்தியம் முழங்க அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஆங்காங்கே பூரண கும்பம் வைக்கப்பட்டு அமைச்சருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. ஓரிடத்தில் ஒரு இளம் பெண், அமைச்சருக்கு பனை ஓலையினால் இழைக்கப்பட்ட நீத்துப்பெட்டியில் வைத்து கொய்யாப்பழங்களைப் பரிசாகக் கொடுத்தார்.

### விகிதாசார தேர்தல் முறை

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"எதிர்வரும் பொதுத் தேர்தல், விகிதாசார முறைப்படி நடைபெற இருப்பதால் எந்த ஒரு கட்சியும் 70 ஆசனங்களுக்குமேல் கைப்பற்ற முடியாது போய்விடும்.

"தமிழ் மக்களின் தாய் மொழியான தமிழ் மொழிக்குச் சட்டரீதியாக தேசிய மொழி அந்தஸ்து வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சியின்கீழ் இலங்கையில் வாழ்கின்ற 25 லட்சம் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து போட்டியிடுவதன் மூலம் அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் 50 ஆசனங்களையாவது கைப்பற்ற முடியும். அதனால் பல அமைச்சர் பதவிகளையும் பெற்று தமிழ்ப்பகுதியைமட்டுமின்றி முழு இலங்கையையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

"பிராந்தியக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடுவதன் மூலம் 11 ஆசனங்களைக்கூடக் கைப்பற்ற முடியாதுபோய் விடும்.

### யாழ். மாவட்டத்தில்

"கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் கூட்டணியினர் மூன்றில் இரண்டு விதமான வாக்குகளை மட்டுமே பெற்றனர். ஏனைய வாக்குகள் மாற்றுக் கட்சியினருக்கே கிடைத்தன. 1983 ம் ஆண்டுப் பொதுத் தேர்தல், விகிதாசார முறையில் நடைபெறவிருப்பதால் யாழ். மாவட்டத்தில் கூட்டணியினர் மூன்றில் இரண்டு வீத வாக்குகளைப் பெற்றாலும்கூட 8 ஆசனங்களைமட்டுமேதான பெற முடியும். ஏனைய வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சியினருக்குக் கிடைத்தால் அக்கட்சிக்குப் 4 ஆசனங்கள் கிடைத்துவிடும்.

### மலையகத் தமிழர்

"கடந்த பொதுத் தேர்தலில் 99 சதவீதமான மலைநாட்டுத் தமிழர் ஐக்கிய தேசியக்கட்சிக்கே வாக்களித்தனர். பட்டக்களப்பில் 2 தொகுதிகளைத் தவிர ஏனைய தொகுதிகளை ஐக்கிய தேசியக் கட்சியினரே கைப்பற்றியுள்ளனர். திருகோணமலையிலும் எமக்கே கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. [illegible] 2 ஆயிரம் வாக்குகளால் மட்டுமே தோல்வி அடைந்தோம். வவுனியாவிலும் அப்படியே. இவ்விதமாக இந்த நாட்டிலுள்ள சகலரும் எமது கட்சியை ஆதரிக்கும்போது யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள்மட்டும் எதற்காக எமது கட்சியை வெறுக்கவேண்டும்?

### ஆற்றல் மிகுந்த தமிழ் மக்கள்

"தமிழ் மக்கள் மிகவும் கடுமையான உழைப்பாளிகள்; கல்விமான்கள். எதிலும் துணிவுடன் செயல்படும் ஆற்றல் மிக்கவர்கள். உலகின் பல பாகங்களுக்கும் சென்று டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும், சட்டவல்லுநர்களாகவும் கடமை புரிந்து, அந்தந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும் பாடுபடுபவர்கள். அவ்வளவு கடின உழைப்பாளிகள் ஏன் எம்முடன் சேர்ந்தும் இந்த நாட்டின் அபிவிருத்திக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் எம்முடன் சேர்ந்து பாடுபடக் கூடாது?

### ஐ. தே. கட்சி ஒரு தேசியக் கட்சி

"ஐக்கிய தேசியக் கட்சி ஒரு குடும்பத்திற்கோ அன்றி தனி ஒரு மனிதனுக்கோ அன்றி ஒரு மொழியினருக்கோ சொந்தமான கட்சியல்ல. அது ஒரு தேசியக் கட்சி. சகல இன, மொழி, மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சொந்தமான கட்சி என்பதை கடந்த பொதுத் தேர்தலில் சகலருக்கும் எடுத்துக் கூறினோம். அதனால்தான் இவ்வளவு பெரும் தொகையான ஆசனங்களைக் கைப்பற்ற முடிந்தது. யாழ். மாவட்டத்தில் வாழுகின்ற தமிழ் மக்களும் இதை உணர்ந்து செயல்படவேண்டும். இதை உணர்ந்தால் தமிழ் மக்கள் நல்ல பலனை அடைய முடியும்.

1973 ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தை திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஏற்றுக்கொண்டபோது, அவருக்கும் கட்சிக்கும் எதிராகப் பலர் இயங்கினர். எம்மைப் பயமுறுத்தினர், சித்திரவதை செய்தனர், சிறையிலும் அடைத்தனர். டெடிகம இடைத் தேர்தலின்போதும் எம்மைப் பலர் பயமுறுத்தினர். இவ்விதமாக எமது வளர்ச்சியைத் தடைசெய்துவிடலாமென அவர்கள் மனப்பால் குடித்தனர்.

"இன்று எமக்கு ஆதரவாகவுள்ள பொலிசார்கூட அன்று எம்மைக் குண்டாந்தடியால் தாக்கினார்கள்; சிறையில் வைத்துப் பல கொடுமைகளைச் செய்தனர். அதே நிலைதான் இன்று யாழ்ப்பாணத்தில் நடக்கிறது. எமது கட்சியினர் பயமுறுத்தப்படுகிறார்கள்; துப்பாக்கியால் சுடப்படுகின்றார்கள்.

### "பழிவாங்க விரும்பவில்லை"

"நாம் யாரையும் பழிவாங்கவோ, துன்புறுத்தவோ விரும்பவில்லை. அதே வேளை எமது கட்சியினரை யாரும் பயமுறுத்தினாலோ அன்றி சித்திரவதை செய்தாலோ நாம் சும்மா பார்த்துக்கொண்டிருக்கப்போவதில்லை. எமது பொறுமையைப் பலவீனமாக யாரும் நினைக்கக்கூடாது.

"கடந்த தேர்தலின்போது தனி மனிதனுக்கே வாக்களிக்கப்பட்டது. அடுத்த தேர்தலில் கட்சிக்கே வாக்களிக்கப் போகிறீர்கள். அந்த வாக்குகள் தேசியக் கட்சிகளுக்கு அளிக்கப்பட்டால் தமிழ் மக்கள் பல நன்மைகளை அடைய முடியும். ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய தேசியக் கட்சிகளில் மக்கள் விடுதலை முன்னணியை மக்கள் ஏற்கவில்லை. சுதந்திரக்கட்சி அடுத்த பொதுத் தேர்தல் வரை நிலைத்து நிற்குமோ எனக் கூறமுடியாது. அடுத்துள்ளது ஐக்கிய தேசியக்கட்சி ஒன்றுதான். இலங்கையில் வாழ்கின்ற சகல தமிழ் மக்களும் ஐக்கிதேசியக் கட்சியையே ஆதரிக்கின்றார்கள் என்பதை யாழ். மாவட்டத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் உணர்ந்து செயல்படவேண்டும். யாழ்ப்பாண மக்கள் தமக்கு ஒரு நல்ல பாதையை அமைக்கவேண்டும். அதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் நல்ல ஒரு சந்தர்ப்பமாக அமையும்.


### நான் அளிக்கும் வாக்குறுதி

"யாழ்ப்பாணத்திலிருந்து எமது கட்சியைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டால் அவருக்குக் கட்டாயமாக ஒரு அமைச்சர் பதவி கிடைக்கச் செய்வேன். நான் யாருக்கும் அவசியமில்லாது வாக்குறுதி அளிக்கமாட்டேன். வாக்குறுதி கொடுத்தால் அதை நிறைவேற்றத் தவறமாட்டேன்" என்றார்.

### யாழ். மாவட்ட அமைச்சர் கருத்து

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோன் பேசுகையில் கூறியதாவது: "கூட்டணியினர் என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும் தனித்தமிழ்நாடு அமைக்க முடியாது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடபகுதியில் இருந்து எமது கட்சியைச் சேர்ந்த 5 பேராவது தெரிவு செய்யப்படுவார்கள்.

5-ம் பக்கம் பார்க்க




'அம்புஷ்'
கிருமிப் பீடைகளிலிருந்து உங்கள் பயிர்களைக் காக்கும்.

மயிர்க்குட்டி, வெட்டுப் புழு, தாவர மூட்டுப்பூச்சி, அந்துப் பூச்சி ஆகியவற்றை 'அம்புஷ்' பாவித்து அழியுங்கள்;

மீண்டும் மீண்டும் தெளிக்கும் தேவையைக் குறைத்து, நீண்ட காலம் கிருமிப் பீடைகளைச் சிறப்பாகக் கட்டுப் படுத்துவதில் 'அம்புஷ்' உத்தரவாதமானது.

விரைந்து செயற்படும் 'அம்புஷ்' பாவித்து உங்கள் வருவாய் பெருக வழி காணுங்கள்.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352, கொழும்பு.
தொலைபேசி: 28421

TAL 5147


## பண்டத்தரிப்பில் திருட்டுகளுக்கு முற்றுப்புள்ளி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் பண்டத்தரிப்புப் பட்டின சபைப் பகுதியில் இரவு வேளைகளில் பாதுகாப்புச் சேவையை ஆரம்பித்த பின்பு இப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும், அண்மையில் நடைபெற்ற திருட்டு முயற்சியொன்று காவலாளிகளால் கையும் மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதென்றும் இந்தப் பாதுகாப்புச் சேவையை விஸ்தரிக்கச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றுகையில் அதன் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி பண்டத்தரிப்புக் கிளைத் தலைவருமான திரு. எஸ். சின்னராசா குறிப்பிட்டார்.

புதிய நிர்வாகிகள் தெரிவில் திரு. எஸ். சின்னராசா மீண்டும் தலைவராகவும், திரு. எஸ். அல்போன்சன் செயலாளராகவும், திரு. கே. மயில்வாகனம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இலவச பாடநூல்:

## உணவு முத்திரையால் பாதிப்புற்றோர்

# ஓரளவு நிவாரணமடைவர்"

-- எதிர்க்கட்சித் தலைவர்

(மாவிட்டபுரம்)

"அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளில் சில மக்களைப் பாதித்திருக்கிறது. உணவு முத்திரை மூலம் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலவசப் பாடநூல் விநியோகம் மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தை அளித்துள்ளது. இப்புத்தகங்களை அரசாங்கத்திடமிருந்து நாம் நன்கொடையாகப் பெறவில்லை. இவற்றைப் பெறும் உரிமை எமக்குண்டு, ஆகவே உரிமையுடன் தான் இவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறோம்"

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலய புதிய கட்டிடத் திறப்பு விழா இலவசப் பாடநூல் விநியோகம் ஆகிய வைபவங்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத்தொகுதி எம்.பியுமான திரு.அ. அமிர்தலிங்கம் கூறினார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டபின் சுவாமிப் படங்கள் சகிதம் திரு. அமிர்தலிங்கமும், கல்வி அதிகாரிகளும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. அ. அமிர்தலிங்கம் 75 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்து, இலவச பாடப் புத்தக விநியோகத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

அவர் இங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:

"நாம் இந்த நாட்டு பிரஜைகள் என்ற முறையில் எமக்குப் பல உரிமைகள் உண்டு. அவற்றை நாம் நன்கொடையாகவோ இரந்தோ பெறப் போவதில்லை. உரிமைக்காக வாதாடவும், உரிமை மறுக்கப்படும் போது கண்டிக்கவும் எமக்கு உரிமை உண்டு. தீமையைக் கண்டிக்கிற நேரத்தில் நன்மையைப் பாராட்டவும் வேண்டும்."

வட்டார வித்தியாதிகாரி திரு. சிவஞானசுந்தரம் பேசுகையில், குறைந்த அளவே பாட நூல்கள் கிடைத்ததாகவும் மிகுதி கிடைத்ததும் பூரண விநியோகம் நடைபெறுமென்றும் தெரிவித்தார்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ)

## "யாழ். மாவட்டப்பாடசாலைகள் நிதிஒதுக்கீட்டில் பாகுபாடு"

### மானிப்பாய் எம். பி. கவலை

(சுன்னாகம்)

"ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் சமதர்ம இலட்சியமே எனது குறிக்கோள். இன்று இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இலவச பாடநூல் விநியோகத்தினால் இலட்சக்கணக்கான வறிய பிள்ளைகள் பயனடைவர். அதன் பெருகவே இத்திட்டத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால் சில பாடநூல்களில் தமிழினத்தை அவதூறு செய்யும் கருத்துக்களும் இருக்கலாம். அவற்றை நாம் வரவேற்கமுடியாது. அத்தகைய தவறுகளை அரசாங்கம் வருங்காலத்தில் திருத்திக்கொள்ள வேண்டும். பாடநூல்களை அரசு விநியோகிக்க வேண்டும் என்ற கொள்கையை அமுல்படுத்தியது ஐக்கிய முன்னணி அரசாகும். ஆனால் இன்றைய அரசு இலவசமாகப் பாடநூல்களை வழங்குவதுதான் வித்தியாசம்!"

என்று ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலையில் நடைபெற்ற இலவச பாடசாலைப் புத்தகங்களை மாணவர்களுக்கு விநியோகிக்கும் விழாவில் கலந்துகொண்டுஉரையாற்றிய மானிப்பாய்த் தொகுதிஎம். பி. திரு. வி. தர்மலிங்கத் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு வித்தியாலய அதிபர் திரு. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமைவகித்தார்.

திரு. வி. தர்மலிங்கம் எம். பி. மேலும் பேசியதாவது: "இவ்வித்தியாலயத்தை மகா வித்தியாலயமாக்க வேண்டும். தேவையான ஆசிரியர்களைப் பெற்றுத்தரவேண்டும். என்றெல்லாம் வித்தியாலய அதிபர் பல தடவைகள் என்னைக் கேட்டுள்ளார். ஆனால்பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் இப்பாடசாலை கட்டிடநிதிக்காக அதிபருடன் கலந்துபேசி நான் ஒதுக்கிய நாற்பதினாயிரம் ரூபாவையும் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் வெட்டித்தள்ளி விட்டார், சில பாடசாலைகளுக்கு மட்டும் இரண்டுலட்சம் ஒரு லட்சம் என்று நிதிஒதுக்கியுள்ளார். இவற்றையெல்லாம் ஏற்க என்னால் முடியாது என்று தெரிவித்த நான் வேண்டுமானால் நான் சமர்ப்பித்த முழுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துமாறு அவரிடம் தெரிவித்துள்ளேன்"

இலவச பாடநூல் விநியோகத்தை கல்வி அதிகாரி திரு. இராமநாதன் ஆரம்பித்து வைத்தார். முதலாவதாக இலவசப் புத்தகங்களை வழங்கினார். அவரைத் தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர்களான திருவாளர்கள் வ. பத்மநாதன், இ. தர்மலிங்கம், சைவப் பெரியார் சி. முருகேசு ஆகியோரும் இலவச பாட நூல்களை மாணவர்களுக்கு விநியோகித்தனர். (அ)

### இலவச பாடநூல்:

## மட்டக்களப்பு மாணவர்கள் ஏமாற்றம்

(மட்டுநகர்)

மட்டக்களப்புப் பகுதியில் எதிர்பார்த்ததுபோல் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்படாததால் மாணவர்களும், பெற்றோர்களும் தவிப்படைந்துள்ளார்கள்.

பாடசாலைகள் ஆரம்பித்தவுடன் பாலர் தொடக்கம் எட்டாம் தரம் வரை இலவசபாடநூல் விநியோகம் செய்யப்படும் என்று கல்விச் சேவை அமைச்சு அறிவித்திருந்தது. இதனை எதிர்பார்த்த மாணவர்களும், பெற்றோர்களும் இறுதி நேரத்தில் ஏமாற்றமும், தவிப்பும் அடைந்துள்ளார்கள்.

மட்டக்களப்புப் பகுதிப்பாடசாலைகளில் முதலாம், இரண்டாம் தரங்களுக்கு எவ்வித மான புத்தகங்களும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை

ஆங்கில பாடநூல் எட்டாம் வகுப்புத் தவிர வகுப்புகளுக்கும், தமிழ்ப் புத்தகம் நான்காம், ஐந்தாம், எட்டாம் வகுப்புகளுக்கும், சைவ நெறி பாலர் வகுப்பிற்கும், எட்டாம் வகுப்பிற்கும், விஞ்ஞானம் எட்டாம் வகுப்பிற்கும் ரே. கத்தோலிக்கம் அல்லாத சமயம் எட்டாம் வகுப்பிற்கும் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட இப் புத்தகங்களில் சில பாடசாலைகளில் பற்றாக்குறையும் ஏற்பட்டது. [அ]

## "கிறிஸ்துவின் அழைப்பு"

(தர்மபுரம்)

"கிறீஸ்தவ சபைகளைத்துன்புறுத்திய சவுல் கிறீஸ்துவின் அழைப்பை ஏற்றுக் கொண்டான். கடவுளின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து கடவுளின் அழைப்பை ஏற்றுக் கொண்ட சவுல் பிறசாதிகளிடம் கடவுளைப் பற்றிப் பிரசங்கிக்கிறவனாக தன்னை ஊழியத்துக்கு ஒப்புக் கொடுத்தான்"

இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருள்திரு சாம். டி.ஹார்ஸ்சிங்கடர் அடிகளார் தர்மபுரம் பரி. பவுஸ் ஆலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அருட்திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளார் நடத்திய திருவிருந்து ஆராதனையில் ஒய்வுநாள் பாடசாலைப்பிள்ளைகளுக்கான பரிசில்களை திருமதி ஹார்ஸ்சிங்டன் வழங்கினார். (அரியா. நி-கு)

## தமிழர்...

(2-பக்கத் தொடர்ச்சி)

நிறுவியபோது உலக முஸ்லிம்கள் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் என்றால் தமிழக அரசியல் மாற்றத்தால் இலங்கைத்தமிழர் ஏன் மகிழக் கூடாது. அழகு தமிழைப் பேசவைத்து கூலிகள் என்ற பெயரை மாற்றவைத்த இயக்கம் திராவிடமுன்னேற்றக் கழகம்தான், தமிழக அரசியல் மாறுதலில் மகிழ்ச்சிகொள்ளும் இலங்கை திராவிட இயக்கங்கள் இலங்கை மண்ணை வளப்படுத்தும் தோட்டத் தொழிலாளியின் வாழ்வைப்பற்றி அக்கறை கொள்ள வேண்டும்', என்றார்.

திருவாளர்கள் 'கலையன்பன்', அருமைநாதன், கம்பனை தாசன் ஆகியோரும் உரையாற்றினர். (கு)

## தேசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் சிலருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும். வட பகுதியிலுள்ள கிராமங்கள் தோறும் கட்சிக்காரியாலயங்கள் அமைக்கப்பட்டு கட்சியை வளர்க்கவேண்டும்" என்றார்.

திரு. இராஜ சூரியர் பேசுகையி; "எமது கட்சியை நம்பிய பல இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி விரக்தியுற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாப்பளிக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

திரு. சந்திரசேகரம் பேசுகையில்; தென்பகுதியிலுள்ள பயங்கரவாத இளைஞர்களுக்கு மன்னிப்பு வழங்கிய அரசு அதே போன்று வடபகுதியில் பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞர்களையும் மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (தெசு)

## "விலைவாசி விஷம்போல் ஏற சுருட்டுவேதனம் குறைப்பா?"

-- முதலியார்

(யாழ்ப்பாணம்)

1000 சுருட்டுக்கு 50 ரூபா வழங்க மறுக்கும் சுருட்டுத் தொழிற்சாலை ஊழியர்கள், தமக்கு சரியான வேதனம் கிடைக்கும்வரை வேலையைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

சென்ற 15ந் திகதி முதல் இவர்கள் வேலைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இப்பகிஷ்கரிப்புக் குறித்து, இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. மா. க. முதலியார் விடுத்த அறிக்கையில், "அத்தியாவசியப் பண்டங்களின் விலை விஷம் போல் ஏறும்வேளையில், சுருட்டின் விலைகளை அதிகரித்து, தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைப்பது மனித உரிமைகளுக்கு மாறானது" என்று குறிப்பிட்டுள்ளார்.

சுருட்டுத் தொழிலாளர்களுக்குத் தற்போது 1000 சுருட்டுகளுக்கு 32 ரூபா முதல் 40 ரூபா வரையே முதலாளிமார்கள் வழங்க முற்பட்டதையடுத்து இவர்கள் வேலைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனரென்றும் திரு. முதலியார் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (கெ-அ)

## "சுருட்டுத் தொழிலாளர் நியாயம் கிடைக்கும்வரை பகிஷ்கரிப்புத் தொடரும்"

--துரைராஜசிங்கம்

(யாழ்ப்பாணம்)

1000 சுருட்டுக்கு ஐம்பது ரூபா ஊதியம் கிடைக்காது வேலைகளைப் பகிஷ்கரித்துவரும் சுருட்டுத் தொழிலாளர்கள், நியாயம் கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுமாறு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தலைவர், திரு. ஆ. துரைராஜசிங்கம் விடுத்த சேய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முதலாளிமார்கள், தொழிலாளர்களின் கடினஉழைப்பை மதியாது அவர்களது ஊதியத்தை நியாயமாகத் தீர்க்கத் தவறியதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சுருட்டுக்கு விலை அதிகரிப்புச் செய்யும் அதே வேளையில் அவர்களது வேதனத்தையும் சரியாகத்தீர்க்குமாறு வேண்டுகிறேன்.

"தொழிலாளர் பிரச்னைகளை ஒவ்வொரு முதலாளியும் நியாயமாகதீர்க்கத்தவறினால், வளர்ந்துவரும் சுருட்டுக் கைத் தொழிலை, அழிக்க முற்படுவதாகவே இருக்கும்". (கெ-அ)

## இடமாற்றம்

[அரியாலை]

யாழ்ப்பாண மாநகரசபையில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய திரு. ஐ. தருமகுலசிங்கம் மட்டக்களப்பு மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [கு]

## தையல் மெஷின்கள் வழங்கப்படும்

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள சமூக சேவைத் திணைக்களம் மாதாந்த பொதுசன உதவி புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் தையல் மெஷின்களை வழங்குவதற்காக 14 சிங்கர் தையல் மெஷின்களை யாழ். சமூக சேவைப் பகுதிக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ளது.

இவற்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகப் பங்கீடு செய்து வழங்குவதற்கேற்ற நடவடிக்கைகளை யாழ். சமூக சேவை உதவிப் பணிப்பாளர் திரு. கே. கெங்காதரன் மேற்கொண்டுள்ளார். (அ)

## 'ஈழநாடு' ஆதரவில் உதைபந்தாட்டப் போட்டி

(பலாலி)

வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் உரும்பராய் - ஜொலி ஸ்ரார் வி. கழகத்தை எதிர்த்து ஈவினை - பறக்கும் இளைஞர் வி. கழகம் போட்டியிடும் 11 வீரர் ஆட்டத்தில் கரணவாய் - வள்ளுவர் வி. கழகத்தை எதிர்த்து மயிலிட்டி - கண்ணகி வி. கழகம் போட்டியிடும். இப்போட்டி 4-30 மணிக்கு இடம் பெறும். "ஈழநாடு" ஆதரவில் இடம் பெறும் இப் போட்டிகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். (ஈ)

நாரந்தனை கி. அ. ச.

## மிளகாய்விலைபற்றி மகஜர்

(நாரந்தனை)

வெங்காயம், மிளகாய் என்பவற்றிற்கு நியாயமான விலை நிர்ணயிப்பது தொடர்பான மகஜர் ஒன்றை நாரந்தனைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடம் கையளித்தனர்.

வெங்காயம் அந்தர் 300ரூபாயாகவும், மிளகாய் அந்தர் 1500 ரூபாவாகவும் நிர்ணயிக்கும்படியே தமது கோரிக்கையில் கேட்டுள்ளனர். (கு)

## அனைத்துலகத் திருநாள்

(ஊரெழு)

"தமிழர் திருநாளான தைப் பொங்கல் உழவர்கள் முன்னிலைப்படுத்தி தமிழர்களால் கொண்டாடப்படும் வெற்றி விழாவாக இருந்தபோதிலும் செய்யும் தொழிலே தெய்வமாகக் கொண்ட அனைத்துலக மக்களும் சாதி, சமய, இன நாட்டு வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டுக் கொண்டாட வேண்டிய உலகத் திருநாளாகவும் அமையவேண்டும்"

இவ்வாறு ஊரெழு கிராமமுன்னேற்றச்சங்கத்தினால் நடாத்தப்பட்ட உழவர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய ஊரெழு கிராமசேவை அலுவர் திரு. அ. க. த. கிருஷ்ணராசா கூறினார்.

கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு இ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தவிழாவில் ஊரெழு கணேசவித்தியாசாலை அதிபர் திரு. ச. கதிரவேலு சிறப்புரையாற்றினர். (கு)

## இலவச நூல் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை கணேச வித்தியாசாலை மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகத்தை மகாவலித்திட்டப் பொறியியலாளர் திரு. க, சத்திய

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளாவில் 10 ஆண்டுகளின்பின் மீண்டும் இடதுசாரி ஆட்சி

## மார்க்ஸிஸ கம். தலைமையிலான கூட்டணிக்கு 93 தொகுதிகள்

திருவனந்தபுரம், ஜன. 23

கேரள சட்டசபைத் தேர்தலில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி 93 ஸ்தானங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது.

140 தொகுதிகளைக் கொண்ட இச்சட்டசபையில் இடதுசாரி முன்னணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு இன்னும் ஒரே இடம் மட்டுமே தேவை.

10 ஆண்டுகளுக்குப் பின்னரே மீண்டும் இம்மாநிலத்தில் இடதுசாரிகளின் ஆட்சி அமைகிறது.

1969ம் ஆண்டு இந்திய மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. நம்பூதிரிபாத்தின் ஆட்சிக்குப் பின்னர் இப்பொழுதான் மீண்டும் இடதுசாரிக் கட்சி ஆட்சிக்குவருகிறது.

### இ. காங்கிரஸ் எதிர்க்கட்சி

இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 41 தொகுதிகளையும் இந்திரா காங்கிரஸுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்ட ஜனதா கட்சி 5 தொகுதிகளையும் சுயேச்சை வேட்பாளர் ஒரு தொகுதியையும் கைப்பற்றினர்.

### லோக்தளுக்கு ஒருதொகுதி கூடக் கிடைக்கவில்லை

10 தொகுதிகளில் போட்டியிட்ட லோக்தள் ஒரு தொகுதியைக்கூடக் கைப்பற்றவில்லை,

### 5 பெண்கள் வெற்றி

13 தொகுதிகளில் போட்டியிட்ட பெண்களில் 5 பேர் வெற்றிபெற்றனர். (இ)

# இந்திரா - வால்ட்ஹெய்ம் புதுடில்லியில் சந்தித்தனர்

புதுடில்லி, ஜன. 23

சர்வதேச விவகாரங்கள் குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுநடத்துவதற்காக இந்தியா வந்த ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் கர்த் வால்ட்ஹெய்ம் உடனடியாக பாகிஸ்தான் திரும்பினார்.

திருமதி காந்தியுடன் 45 நிமிடங்கள் மட்டுமே பேச்சு நடத்தினார்.

அதிகரித்துவரும் ஆப்கானிஸ்தான் நெருக்கடி குறித்து பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்குடன் பேச்சு நடத்தவே டாக்டர் வால்ட்ஹெய்ம் தமது இந்திய விஜயத்தை விரைவில் முடித்துக் கொண்டும் நேபாளவிஜயத்தை ரத்துச் செய்து கொண்டும் பாகிஸ்தான் சென்றார்.



இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த 'ஹுக்கா'வைப் புகைக்க தமக்கு அவகாசம் கிட்டவில்லையென்றும் அதைப் புகைக்காமல் செல்வது தமக்கு மிகவும் கவலையளிக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

'ஹுக்கா' புகைப்பிடிக்கும் பாத்திரம் ஒன்று டாக்டர் வால்ட்ஹெய்முக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ)

## ஜெகஜீவன் அதிர்ச்சி

புதுடில்லி, ஜன. 23

ஹரியானு சட்டசபைமுதல்வர் திரு. பஜன்லாலும் மற்றும் 37 சட்டசபை உறுப்பினர்களும் ஜனதா கட்சியிலிருந்து ராஜினமாச் செய்து இந்திரா காங்கிரஸில் சேர்ந்து கொண்டதைக் கேள்வியுற்றதும் தாம் அதிர்ச்சியடைந்ததாக ஜனதா கட்சித்தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

ஜனதாகட்சியின் இன்றைய நிலை குறித்து ஜனதா கட்சிப் பாராளுமன்றக்குழு விரைவில் கூடி ஆராயுமென்றும் அவர் கூறினார். (இ)

......

## தங்கத்தின் விலை சரிந்தது!

நியூயோர்க், ஜன. 23

நியூயோர்க்கிலும் லண்டனிலும் தங்கத்தின்விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

நியூயோர்க்கில் கடந்த திங்களன்று 822 டாலராகஇருந்த ஒரு அவுன்ஸ் தங்கம் இன்று 678 டாலராக விலை குறைந்துள்ளது.

லண்டனில் 737 டாலராக இருந்த தங்கம் இப்போது 690 டாலராகக் குறைந்துள்ளது. (இ)

# ஓமானில் அமெரிக்க படைத்தளம் அமைக்க அனுமதி கிடையாது

## வெளியுறவு அதிகாரி கண்டனம்

மஸ்கட், ஜன. 23

ஓமானில் வெளிநாட்டுத் துருப்புக்கள் தங்கியிருக்கவோ தளம் அமைக்கவோ அனுமதிக்கப்படமாட்டாது என்று ஓமான் வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் - ஓமானில் படைத்தளம் ஒன்றை அமைக்கலாமென அமெரிக்கமுன்னாள் வெளிநாட்டமைச்சர் டாக்டர் ஹென்றி கீசிங்கர் தெரிவித்துள்ள கூற்றுக்கு எதிராகவே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு மட்டுமல்ல வேறு எந்த ஒரு நாட்டுக்கும் ஓமானில் படைத்தளம் அமைக்க அனுமதி அளிக்கப்படமாட்டாதென்றும் அவர் கூறினார். (இ)

## இந்திராவுக்கு வாக்களித்ததால் தமிழக அரசு ஹரிஜனர்களுக்கு கொடுமை இழைக்கிறது

### இளைய பெருமாள் குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 23

லோகசபைத் தேர்தலில் தமிழ்நாடு ஹரிஜனமக்கள் இந்திரா காங்கிரஸ்கட்சிக்கு வாக்களித்தார்கள் என்பதற்காக அவர்களை அ.தி.மு.க. அரசு கொடுமைப்படுத்திவருகிறது.

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டுக்கிளைத்தலைவர் திரு. இளையபெருமாள் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழக- அ.தி.மு.க.அரசின் இச்செயல்கள் குறித்து மாநில அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று திரு. இளையபெருமாள் மத்திய அரசைக் கேட்டுள்ளார். (இ)

### லோக்தள் — அர்ஸ்காங்கிரஸ்

# மத்தியிலும்மாநிலங்களிலும் கூட்டு எதிர்க்கட்சி

## தலைவர் பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜன. 23

இந்தியப் பாராளுமன்றத்திலும், மாநிலங்களிலும் கூட்டு எதிர்க்கட்சிகளை அமைப்பது குறித்து அர்ஸ் காங்கிரஸ் தலைவர்களும், லோக்தள் தலைவர்களும் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இவ்விஷயம் தொடர்பாக காங்கிரஸ்தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ் நேற்று லோக்தள் தலைவர்களில் ஒருவரான திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸை பெங்களூரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்திய லோகசபையில் தனியானதொரு எதிர்க்கட்சியாக எந்த ஒரு கட்சியுமே வரமுடியாத நிலை ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. (இ)

# எகிப்து-இஸ்ரேல் எல்லைகள் ஜன26-ல்திறந்துவைக்கப்படும்

## பாலஸ்தீன இயக்கம் ஆட்சேபம்; பொதுவேலை நிறுத்த முஸ்தீவு

ஜெருஸலம், ஜன. 23

இஸ்ரேல்-எகிப்து ஒப்பந்தத்துக்கமைய இஸ்ரேலிய-எகிப்து எல்லைகள் இம்மாதம்26ம்திகதி சனிக்கிழமை திறந்துவைக்கப்படும்.

இதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையே ராஜதந்திர தொடர்புகள் தூதுவர் ரீதியில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

### பொதுவேலைநிறுத்தம்

இதே வேளையில் இந்த நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் சனிக்கிழமையன்று அரபு நாடுகளில் பொதுவேலைநிறுத்தம் ஒன்றை நடைமுறைப் படுத்துமாறு பாலஸ்தீனவிடுதலை இயக்கம் அரபு நாடுகளைக் கோரியுள்ளது.

பொதுவேலை நிறுத்தத்தோடு இஸ்ரேல்-எகிப்து ஒப்பந்தத்துக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் பல்வேறு வகையான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடுதலை இயக்கம் அரபு நாடுகளைக் கேட்டுள்ளது. (இ)


விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்

25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.

தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !

உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும் ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும் உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !

Mel Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
**தனிப்பிறவி**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி-சாவித்திரி
**கடன் வாங்கி கல்யாணம்**

3-வது ஜனசமுத்திர வாரம்
**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. YORK SUSANNAH
**SKY RIDERS**
குறிப்பு :- காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கற்றுக்கு முந்துங்கள்.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
**புகுந்த வீடு** (புத்தம் புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
**Zoltan Hound of Dracula**

இன்று மட்டும்
**மனோஹரா A** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
கலைஞர் கருணாநிதியின்
**பூம்புகார்** (புதிய பிரதி)
நாளை முதல் கற்புக்கரசி

**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
26-1-80-ல் 100-வது வெற்றித்தின விழா!
கடைசி வாரம் **டாக்ஸி டிரைவர்** - கலர்
இத்துடன் 'அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரைப் பவனி'' -நேர்முக வர்ணனை கலைஞர் மு. கருணாநிதி.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி, சுஜாதா, நாகேஷ், விஜயகுமார்
**தீபம்**
Coming Soon - AIR PORT FREAMED

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா,
ஜெய்கணேஷ், அசோகன்
**தாயில்லா குழந்தை**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
5-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் **சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி மங்கையர் கூட்டம் மடை திறந்த வெள்ளம் போல் அலை மோதும் காரணம் யாதோ?
மங்கையர் திலகம் சாவித்திரியுடன்
நாகேஸ்வரராவ்
சேர்ந்து நடித்த
**தேவதாஸ்** தான் காரணம்
காட்சிகள் குறித்த நேரத்திற்கு முன்பே தொடங்குவதால் தங்கள் ரிக்கட்டுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்


# இன்றைய பலன்

தை மாதம் 10-ம் திகதி
வியாழக்கிழமை
(24-1-1980)

மேடம்: முகமன் பேசுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும், எதிர்பாராத வகையில் பிரச்னைகளும் உருவாகலாம், எவ்விடயத்திலும் கவனப்படுத்தி நடக்கவும்.

இடபம்: இலட்சிய மனப்பான்மை உருவாகும், பயனுள்ள சந்திப்பும் தொடரலாம், கல்வியிலும் அபிவிருத்தி தென்படும்.

மிதுனம்: ஏமாற்று வேலைகள் இடம் பெறும், குடும்பத்திலும் அமைதி குன்றும், வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

கடகம்: சிலர் புதிய பொருட்களை கொள்வனவு செய்யவும் நேரிடலாம், பகை மூட்டமும் விலகக்கூடும், வாகன சொந்தக்காரர் பெருமையடைவர்.

சிங்கம்: புகழ் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், திறமைக்கு முதலிடம் உண்டு, அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு.

கன்னி; ஆசாரக் குறைவுக்கிடமுண்டு, வாழ்க்கையில் புதிரான நிலை தோன்றும், சிநேகித வழியாலும் கவலைக்கிடமுண்டு, விழிப்புணர்ச்சியுடன் இருக்கவும்.

துலாம்: காதல் சிட்டுகளுக்கு மகிழ்ச்சிகரமான தினம், குடும்பவழிச் செல்வாக்குப் பெருகும். கடமையும் சிறப்புப் பெறும்.

விருச்சிகம்: செல்வாக்கும் பாதிக்கப்படலாம், தொல்லைகள் அலைமோதும், வைத்தியச் செலவுகளுக்கு இடமேற்படலாம், நண்பர்களை நம்ப வேண்டாம்.

தனுசு: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும், இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு, முதியவர் ஒருவரின் அறிவுரை மகிழ்ச்சியைத் தரும்.

மகரம்: குடும்ப நலனில் உற்சாகம் பிறக்கும், எதிர்பார்த்த காரியம் இன்று நிறைவேறலாம், புதுமையான செய்திக்குமிடமுண்டு.

கும்பம்: முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுவீர்கள், அறவழியின் மூலம் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், சகோதர சந்தோஷமும் உண்டு.

மீனம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும், உங்களை சிக்கலில் மாட்டிவைப்பதற்கு சிலர் முனைவர் மற்றவர் விடயத்தில் தலையிடாதிருக்கவும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## பதவி உயர்வு

[அரியாலை]

வடபகுதி விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எம். தனப்பிரபாலன், இ. இம்மனுவல், கே. கந்தையா, திருமதி எம். ஆர். கொலின்ஸ் ஆகியோர் விற்பனை அபிவிருத்தி அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றுள்ளனர். [அ]


**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
**முத்துச்சிப்பி**




ரமண மகரிஷி நூற்றாண்டு விழாவை ஒட்டி திவ்ய ஜீவன சங்கத்தினர் எடுத்த விழாவின் போது பகவான் ரமணரின் திருவுருவம் வீதி உலா வருகையில் எடுத்தபடம்.

# மகளின் பிரிவு தாங்காது ரயில்முன் விழுந்தார்தந்தை

(புளியங்குளம்)

தந்தை ஏசியதைத் தாங்க முடியாத இளம் பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தித்தற்கொலைசெய்து கொண்டதைத் தொடர்ந்து தந்தையும் ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்!

புளியங்குளத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவியான செல்வி தணிகாசலம் ஜெயந்தியின் மரணவிசாரணையின் போது தந்தை வெட்டுக்கத்தியைக் காணவில்லை என்று ஏசிய தாலேயே கிருமிநாசினி அருந்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் நடைபெற்று இரண்டு தினங்களுக்குப்பின்னர் இறந்தவரின் தந்தையான தணிகாசலம் புகைவண்டியின் முன்னுல் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

இதுதொடர்பான மரண விசாரணை [illegible] கனகராயன்குளம் மரண விசாரணை அதிகாரி திரு. அ. அரிராசசிங்கம் நடாத்தினுர். முதலில் இறந்தவரின் மனைவியான திருமதி த. தங்கமுத்து சாட்சியமளிக்கையில் "இறந்தவர் எனது கணவர். எங்கள் மகள். இரண்டு தினங்களுக்கு முன் இறந்தவர் வெட்டுக்கத்தியைக் காணவில்லை என்று ஏசியதலால் மனமுடைந்து கிருமிநாசினியைக் குடித்துத்தற்கொலைசெய்து கொண்டார். மகளின் ஈமைக்கிரியைகள் முடிந்தபின்னர் எனது கணவர் மனநிம்மதியற்ற நிலையில் மகள் சென்ற இடத்துக்கே தானும் செல்லப்போவதாகக் கூறிவந்தார். சடந்த இரண்டு தினங்களாக உணவு எதுவும் உட்கொள்ளவில்லை. அன்று இரவு 10 மணியளவில் அவரின் படுக்கையைப் பார்த்தேன். அவரைக் காணவில்லை. உடனடியாக நானும் உறவினர்களுமாகத் தேடினேம். சுமார் இரண்டு மணியளவில் ஒருவர் மெயில் வண்டிமுன் பாய்ந்துள்ளார் என்ற செய்தி கிடைத்தது. சம்பவம்நிகழ்ந்த ஸ்தலத்திற்கு விரைந்துபார்வையிட்டபோது இறந்தவர் எனது கணவர் என்று அடையாளம் கண்டுகொண்டேன்'' என்ருர்.

இவரைத்தொடர்ந்து இறந்தவரின் மச்சாளான திருமதி புஷ்பராணியும் சாட்சியமளித்தார். மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். மாங்குளம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. ஈ. தர்மரத்தினம் சாட்சிகளை ஆஜர்செய்தார். (கு)

**யாழ்ப்பாணம்**

# பொதுஜன நூல்நிலையக் குழுவின் முதல் கூட்டம்

## திருத்தங்கள் மேற்கொள்ள புதிய நூல்கள் வாங்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது ஜன நூல்நிலையக்குழுவின் முதலாவது கூட்டம் நேற்றுக்காலை யாழ். நகர மேயர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

பொது ஜனநூல் நிலையக் கட்டிடத்துக்கு வெள்ளையடிக்கவும் மற்றும் சிலதிருத்தங்கள் செய்யவும் அவசியத் தேவையான நூல்கள் சில வாங்குவதற்கும் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மேயர் தெரிவித்தார்.

நூல்நிலையம் சிறந்த முறையில் இயங்கவேண்டுமென்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்கள் பொதுமக்களுடன் சுண்ணியமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் மேயர் கேட்டுக் கொண்டார்.

## காரைநகரில் புத்தகவிநியோகம்

(காரைநகர்)

காரைநகர், பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான இலவச புத்தக விநியோகத்தைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் காப்பாளரும் முன்னள் கிராமசபையின் தலைவருமாகிய திரு. கா. க. விசுவலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

விநியோக விழாவில் அதிபர் திரு. க. ஆறுமுகம், திரு. க. வி. குலரத்தினம் ஆகியோர் உரையாற்றினுர்கள். (கு)

## புதிய கட்டிடம்

(புளியங்குளம்)

பட்டிக் குடியிருப்பு கனிஷ்ட வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்திற்கென சென்ற வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் வவுனியா எம் பி. திரு. தா. சிவசிதம்பரம் 22 ஆயிரம் ரூபா ஒதுக்கினர்.

இக்கட்டிடத்தினை எதிர் வரும் 10ம் திகதி வவுனியா எம். பி. திறந்துவைக்கவுள்ளார்.

......

## சந்தைக்கு 20 ஆயிரம் ரூபா

(புளியங்குளம்)

நெடுங்கேணி பொதுச்சந்தைக் கட்டிடத்தில் ஒருஇறைச்சிக் கடையைக் கட்டுவதற்கு நெடுங்கேணி கிராமச்சபை 20 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக விசேட ஆணையாளரும், உதவிஅரசாங்கஅதிபருமான திரு. எஸ். பாலசுந்தரம் தெரிவித்தார். (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY RECEIVED 1980-1-24 PERIODICALS DIVISION


**வெளிவந்துவிட்டன**

வினுவிடைகள் A/L1980 ஏப்பிரல்

பொருளாதாரம்
T. லோகநாதன் B. A.

இந்து நாகரிகம்
M. S. ஐயர் M. A.

அளவையியல்
R. நவரட்ணம் B. A.

கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
சாரதா ஸ்டோர்ஸ் & புத்தகசாலை
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

V. P. P. மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.


ஈழநாடு The EELANAADU (50 சதம்)

## ஷாவுக்கு காவல் இல்லை

(வாஷிங்டன்)

பனுமாவில் முன்னுள் ஈரானிய மன்னர் ஷா தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை பனுமா அதிகாரிகளும் மன்னர் ஷாவின் நெருங்கிய வட்டாரங்களும் மறுத்துள்ளனர். ஈரானிய ஷா தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பனுமா அதிபர் தெரிவித்திருப்பதாக ஈரான் வானொலி ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.


● விலைகள் அதிகரிக்கவுள்ளன,-
● குறைந்த கையிருப்பேயுண்டு.
● இன்றே வாங்குங்கள்!

**FALCON SCOOTERS**

● கவர்ச்சி, சொகுசு, நிறைந்தது
● வர்ண நிறங்களில் கிடைக்கும்

**பல்க்கன் ஸ்கூட்டர்கள்**

பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685


# வல்லரசு போட்டி இந்துசமுத்திர பிராந்தியத்திற்கு ஆபத்து

## பாராளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரெட்டி

புதுடில்லி, ஜன 23

ஆப்கானிஸ்தானுக்குள் வெளிநாட்டுப் படைகளின் குறுக்கீடும் ஆயுதங்களைக் கொண்டுவருவதும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் அபாயகரநிலையை தோற்றுவிக்கும்.

இந்துசமுத்திர பிரதேசத்தில் வல்லரசுகளின் கெடுபிடிப்போட்டி மீண்டும் தலையெடுப்பதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது.

வல்லரசுப்போட்டிகளுக்குள் இந்தியாவைச் சிக்க வைப்பதை புதிய அரசு விரும்பவில்லை.

இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி இந்திய லோகசபை ராஜ்சயபை கூட்டுக் கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவின் 7-வது பாராளுமன்றம் இன்று முதல் தடவையாக கூடிய போது ஜனாதிபதி ரெட்டி ஆரம்ப உரையை நிகழ்த்தினார்.

ஆப்கானிஸ்தான் நிலை குறித்து இந்தியாவின் கவலையைத் தெரிவித்த திரு. ரெட்டி மேலும் கூறியதாவது

இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகள் தமக்குள் உறுதிப்பாட்டையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த சகல ஆற்றல்களையும் பயன்படுத்த வேண்டும்.

### தேசவிரோத சக்திகள்...

வன்முறைகளைப் புதியஅரசு முற்ருக எதிர்க்கிறது. தேசவிரோதச் சக்திகள் மீண்டும் சுறுசுறுப்படைய ஆரம்பித்துள்ளன. பிரிவினை வாதிகளும் இப்போது சுறுசுறுப்படைய ஆரம்பித்துள்ளர்ன. இதன்காரணமாக தேசிய ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும்ஆபத்து தோன்றியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த அரசு கடும்நடவடிக்கைகளை எடுக்கத்தயங்காது.

### பொருளாதார நிலைகவலைக்கிடம்

புதிய அரசு பதவி ஏற்றபோது இருந்த பொருளாதார நிலை கவலைக்கிடமாகவே உள்ளது. இதைக்கட்டி எழுப்ப வேண்டியது அரசின் பெரும்பணிகளில் ஒன்றுகிறது.

விரைவில் 20 அம்சத்திட்டத்திற்கும் புத்துயிர் அளிக்கப்படஉள்ளது.

### பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம்

பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் புதிய அரசு உத்தரவாதமளிக்கிறது.

### வெளிநாட்டுக் கொள்கை

இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கை மண்டல சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடித்தலே ஆகும். (இ)

## ஒலிம்பிக்ஸ் பகிஷ்கரிப்புக்கு சீனு ஆலோசனை

பீக்கிங் ஜன,23

மாஸ்கோவில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரிப்பது குறித்து சீனுவும் ஆலோசனை செய்து வருகிறது. (இ)

## இலவச...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் வழங்கி விநியோகத்தை ஆரம்பித்துவைத்தார்.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்விநியோக விழாவில் ஆசிரியர் திரு. க. தவமணிதாசன், காடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. வே. நடேசபிள்ளை ஆகியோர் உரையாற்றினர்கள். (கு)

## இந்துக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பர் கிங்ஸிலி விக்கிரமசூரியா பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் சந்தித்து மேற்படி கொள்ளை சம்பந்தமாக விசாரணை நடத்தினர்.

இவ்விசாரணையின் பின் பொலிஸ் அதிபர் கொள்ளையின்போது பாவிக்கப்பட்ட காரின் இலக்கத்தை சரியானபடி காண முடியாத போதும் காரை அடையாளம் கண்டவர்கள் யாராவது இருந்தால் சாவகச்சேரிப் பொலிசாருக்கோ அன்றித் தமக்கோ இரகசியத் தகவல் கொடுக்கும்படியும், தகவல் கொடுத்தவர்களின் பெயர் விலாசம் ஆகியன இரகசியமாக பாதுகாக்கப்படுமெனவும் தெரிவித்தார்,

மேற்படி சம்பளக் கொள்ளை சம்பந்தமாகப் பாதுகாப்பு அமைச்சிலிருந்து யாழ். பொலிஸ் அதிபருக்குக் கிடைத்த தகவலில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் பொலிசார் சந்தேக நபர்களை தேடிப்பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (கொ)

......

## சட்டத்தரணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பட்டுள்ளனர்.

அதைத் தொடர்ந்து செல்வராசா, இராசு ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக் கொள்ளை, கொலை தொடர்பாக இன்னும் சிலரைப் பொலிசார் தேடிவருகின்றனர். ஏனையோர் கைது செய்யப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல கொள்ளை, கொலை, திருட்டுச் சம்பவங்கள் துப்புத்துலக்கப்படலாம் என்று பொலிசார் நம்புகின்றனர். கொ)

## இந்த வீரர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகின்றது. 2 பேர் இறந்துவிட்டார்கள், இருவர் வெளிநாடு சென்றுள்ளனர். மற்றவர்கள் பென்ஷன்பெறும் வயதை எட்டிவிட்டடதாகத் தெரிகின்றது. [ம]

## புதிய மண்டப திறப்புவிழா

(ஊரெழு)

ஊரெழு கணேச வித்தியாசாலை புதிய மண்டப திறப்புவிழா இம்மாதம் 26-ம் திகதி சனிக்கிழமை மாலை அதிபர் திரு. ச. கதிரவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (கு)

### காங்கேசன்துறை

## துறைமுக அபிவிருத்தி: அமைச்சர் நடவடிக்கை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை துறைமுகத்தின் அவலநிலையை வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேரில் பார்வையிட்டு இத்துறைமுக அபிவிருத்திக்கு ஆவன செய்வதாக தெரிவித்தார்.

திரு. க. ஜெயபாலசிங்கமும் துறைமுக நிலைமைகளை அமைச்சருக்கு எடுத்து விளக்கினர்.

இத்துறைமுகம் வசதிகளற்று இருப்பதால் இறக்குமதி ஏற்றுமதி வேலைகள் துரிதமாக நடைபெறமுடியாதிருப்பதாகவும் தொழிலாளர்களது திறமையால் கஷ்டங்களின் மத்தியிலும் இத்துறைமுகத்தில் வேலைகள் வெகு ஆர்வமாக நடைபெறுவதாகவும் இங்கு வசதிகள் பெருகினல் இன்னும் விரைவாக வேலைகள் இடம் பெறுமெனவும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

துறைமுகம் சம்பந்தப்பட்ட வரைபடங்களையும் அமைச்சர் பார்வையிட்டார். ஐ.தே. க. ஆட்சியில் அமரர் டட்லிசேனநாயக்கா இத்துறைமுகத்திற்கு அடிக்கல் நாட்டிய விஷயமும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது,

இவற்றை ஆராய்ந்து அமைச்சர், இது குறித்து தாம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

அமைச்சருடன் யாழ். அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கே, கணேசலிங்கம், திரு. பேரின்பநாயகம், திரு. விமல் அமரசேகரா ஆகியோரும் மற்றும் உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

## சோவியத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

இவரது மனைவி எலினுவும் இவருடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

டாக்டர் ஷக்காராவ் ஒரு கூட்டத்துக்கு போய்க்கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டாராம்.

டாக்டர் ஷக்காராவ் பல வருடகாலமாகவே சோவியத் அரசுக்கு எதிராக செயல்பட்டு வந்துள்ளார் என்றும் எதிர்ப்பு நாடுகளுக்கு ஆதாவாக இருந்துள்ளார் என்றும் சோவியத் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## துயர அறிவித்தல்

### ஐயாத்துரை குமாரசுவாமி

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஐயாத்துரை குமாரசுவாமி காலமானுர். இவர் ஐயாத்துரை கைம்பெண் சிதம்பரம் அவர்களின் ஏக புத்திரனும், பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், விஞேதன் (சட்டத்தரணி, உத்தமி ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துச்சாமி, பாலசிங்கத்தின் மைத்துனரும், காலஞ்சென்ற வெற்றிவேலாயுதர் நாகநாதனின் சகோதரரும், திருமதி ஆனந்தலச்சுமி தர்மசீலன், திருமதி சந்திரலச்சுமி, தனபாலசிங்கம், மதியழகன் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), செல்வி கலாவல்லி ஆகியோரின் பெரியதந்தையும், தர்மசீலன், தனபாலசிங்கம், சிறீரஞ்சினி ஆகியோரின் மாமனுரும், ஆறுமுகம் வேலுப்பிள்ளை (ஆசிரியர்)யின் மருமகனுமாவார். அன்னரது பூதவுடல் ஈமைக்கிரிகைகளுக்காக 24-1-80 வியாழக்கிழமை (இன்று) மாலை 4-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து சண்டிலிப்பாய் சங்கம்புலவு மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும். 4773

## மரண அறிவித்தல்

### திரு. மு. சிற்றம்பலம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஏழாலை)

மல்லாகம் சைவ ஆங்கிலக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும், ஏழாலையைச் சேர்ந்தவருமான திரு. மு. சிற்றம்பலம் காலமாகிவிட்டார். இவர் சி. முருகவேள் (நூலகர், பேராதனை பல்கலைக்கழகம்), சி. முத்துக்குமாரசாமி (ஆசிரியர் ஏழாலை மகாவித்தியாலயம்), சி. சரவணபவன் (ஆசிரியர் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசாலை), சி. மீனுட்சிசுந்தரம், வா. சிவக்கொழுந்து, உ. பகவதியார், ஆ. மாதினியார், ச. பாண்டிமாதேவி ஆகியோரின் தகப்பனுருமாவார்.

அன்னரின் ஈமைக்கிரியைகள் 24-1-1980 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஏழாலை மயானத்தில் நடைபெறும், உற்ருர், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். 4776

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் வரி மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org